சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன் பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
தொலைபேசி: 044-29515590

**விசாரணை நாள். 06.07.2026**

**ஆணை நாள். 23.07.2026**

## முன்னிலை

**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA 17778/D/2025**

செல்வி ச.தைபாவை .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
இணை ஆணையர் (சட்டம்),
இணை ஆணையர் அலுவலகம்,
(தலைமையிடம்),
இந்து சமய அறநிலையத்துறை,
நுங்கம்பாக்கம், சென்னை -34. .. பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)-ன் கீழ் மனுதாரரின் மனு நாள் | 18.07.2025 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல் முறையீட்டு மனுவின் நாள் | 10.09.2025 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 05.12.2025 |

******

## ஆணை

இன்று 06.07.2026 முற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் செல்வி ச.தைபாவை நேரில் ஆஜரானார். மனுதாரரின் பாட்டி திருமதி சத்தியவாணி அவர்களும் நேரில் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர் திருமதி கோ.ஜெயப்பிரியா, இணை ஆணையர் (சட்டம்) (கூடுதல் பொறுப்பு), இணை ஆணையர் அலுவலகம் (தலைமையிடம்), இந்து சமய

அறநிலையத்துறை, நுங்கம்பாக்கம், சென்னை -34 அவர்கள் நேரில் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் 18.07.2025 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி வட்டம், ஜோலார்பேட்டை ஒன்றியம், சந்திரபுரம் கிராம ஊராட்சியில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள ஸ்ரீ பிள்ளையார் திருக்கோயிலின் பெயரில் உள்ள நிலங்கள் மற்றும் சொத்துக்கள் குறித்த விவரம், திருக்கோயில் பெயரில் உள்ள நிலங்கள் எந்த ஆண்டு வழங்கப்பட்டது என்ற விவரம், யாரால் வழங்கப்பட்டது என்ற விவரம், திருக்கோயிலின் பெயரில் எப்போதும் பத்திரப்பதிவு செய்யப்பட்டது என்ற விவரம் தொடர்பான 7 இனங்களில் தகவல்களைக் கோரி பொது தகவல் அலுவலர், அரசு சார்பு செயலாளர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, தலைமைச் செயலகம், சென்னை -09 அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர், தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 19(1)ன் கீழான 10.09.2025 தேதியிட்ட முதல் மேல்மறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தனக்கு முழுமையான தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 19(3)ன் கீழான 05.12.2025 தேதியிட்ட தனது இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அம்மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (06.07.2026) நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர் தான் எட்டாவது வகுப்பு படிப்பதாக தெரிவித்தார். தன் பாட்டியின் துணையுடன் இன்றைய விசாரணைக்கு ஆஜரானதாக ஆணையத்தில் தெரிவித்தார். தான் பள்ளியில் படித்துக் கொண்டிருப்பதாகவும் தான் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் எந்த மனுவும் போடவில்லை என்றும் தான் கையொப்பம் ஆங்கிலத்தில் தான் போடுவேன் என்றும், இந்த மனுவில் உள்ளது தமிழில் உள்ள கையொப்பம் என்றும், அக்கையொப்பம் தான் இட வில்லை எனவும் ஆணையத்தில் தெரிவித்து இந்த மனுவினை தான் எழுதவில்லை என ஆணையத்திற்கு கடிதம் மூலம் தெரிவித்தார். இவ்வழக்கு தொடர்பாக மாணவியின் தாயிடம் அலைபேசியில் தொடர்புகொண்டு பேசிய பொழுது தான் ஒரு அரசு ஊழியர் என்றும், அந்த தகவல் அறியும் உரிமைச் சட்ட மனு தாக்கல் செய்த காலகட்டத்தில் தான் மகப்பேருக்காக எனது தாயார் வீட்டுக்கு சென்றதாகவும், தன் மகள் பெயரில் வேறு யாரோ ஒருவர் மனு செய்து உள்ளதாகவும் ஆணையத்தில் தொலைபேசி வாயிலாக தெரிவித்தார்.

5. ***“நபிகள் பெருமகனார்” புனிதமான ரம்ஜான் மாதத்தில் பத்ரு யுத்தத்தில் பிடிப்பட்ட கைதிகளை விடுவிக்க தங்கள் 10 முஸ்லீம் குழந்தைகளுக்கு எழுத, படிக்க கல்வி கற்றுக்கொடுத்தால் போர் கைதிகளை விடுவிப்பதாக அன்று நபிகள் பெருமகனார் ஆணையிட்டார். எனவே, பொன், பொருளை விட கல்வி மிக உயர்ந்ததாக நபிகள் பெருமகனார் எண்ணிய காரணத்தால் உலகளவில் கல்வியின் முக்கியத்துவம் என்ன என்பது அறிய முடிகிறது. “இளமையில் கல்” “பருவத்தை பயிர் செய்”*** *இது ஔவையார் அருளிய ஆத்திசூடி நூலில் இடம்பெற்றுள்ள நீதிமொழி ஆகும்.* இதன் பொருள்: "எந்தெந்தச் செயலை எந்தெந்தக் காலத்தில் செய்ய வேண்டுமோ, அந்தந்தக் காலத்தில் அந்தச் செயலைச் செய்து முடிக்க வேண்டும்" என்பதாகும். எனவே இது மாணவ மாணவியரின் கல்வி கற்பதற்கான காலமாகும். கல்வி கற்பதில் தான் முழுமையான கவனம் செலுத்த வேண்டும். கவனசிதறல் மாணவ சமுதாயத்திற்கு இருக்கக்கூடாது என்றும், தகவல் அறியும் உரிமைச் சட்டம் பிரிவு மூன்றின் படி அனைத்து குடிமக்களும், மாணவர்களும் தகவல் பெறும் உரிமை சட்டத்தின்படி பிரிவு 6(1) ன் கீழ் மனு செய்ய தகுதி உடையவர் என்றாலும், கல்வி கற்க வேண்டிய காலத்தில் கல்வி கற்பது மாணவர்களின் நலனைக் கருத்தில்

கொண்டு மாணவர்கள் இளமைப்பருவத்தில் எந்தவித கவனச்சிதறலின்றி சிறந்த கல்வி கற்பதன் மூலம் வருங்காலம் சிறப்பாக அமையும் என்று மாணவர்களுக்கு ஆணையம் அறிவுறுத்துகிறது.

6. மேலும் மாணவியின் தாயார் தனது மகள் நன்றாக படிப்பவர் என்றும், பிற்காலத்தில் சிறந்த வழக்கறிஞராக திகழ வேண்டும் என்பது எனது மகளின் ஆசை என்றும், மேலும், இந்த மனுவை எனது மகள் தாக்கல் செய்யவில்லை என்றாலும், அவளின் எதிர்கால ஆசையான வழக்கறிஞர் மற்றும் நீதிபதி ஆக வேண்டும் என்ற ஆசைக்கு இப்போதே வழிகோலும் வகையில், ஆணையத்தின் செயல்பாடுகளை பார்வையிடவே நான் தான் இன்று எனது மகளை ஆணையத்தின் விசாரணைக்கு அனுப்பி வைத்தேன் என்று தொலைபேசி வாயிலாக ஆணையத்தில் தெரிவித்தார். மேலும், அதன் பொருட்டு மனுதாரர் தான் இன்றைய விசாரணைக்கு தான் அளிக்காத மனுவுக்கு பள்ளிக்கு லீவு போட்டுவிட்டு ஆஜரானதாகவும், தான் இம்மனு தாக்கல் செய்யவில்லை என்று கடிதம் ஒன்றை கையொப்பமிட்டு ஆணையத்தின் முன்பு மனுதாரர் சமர்ப்பித்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

7. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் தகவல் கேட்கும் ஒவ்வொருவரும் பொது தகவல் அலுவலரின் அலுவலகத்தில் இருந்து வெளிப்படையான, நேர்மையாக தகவல்களை பெற வேண்டும் என்று எண்ணுகிற, ஒவ்வொரு இந்திய குடிமகனும், ஒவ்வொரு மனுதாரரும், தனக்கும் இந்த விதி பொருந்தும் என எண்ணி செயல்பட வேண்டும் எனவும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் விண்ணப்பிக்கும் அனைத்து மனுதாரர்களும் வெளிப்படைத்தன்மையுடன் செயல்பட வேண்டும் எனவும், தவறான நோக்கில் இச்சட்டத்தை பயன்படுத்தக் கூடாது என்றும் ஆணையம் அறிவுறுத்துகிறது.

8. மேற்படி இந்த வழக்கில் எட்டாம் வகுப்பு படிக்கும் 13 வயது சிறுமியின் பெயரில் அவருக்கே தெரியாமல் அவரின் பெயரில் இந்த மனுவை தாக்கல் செய்தது ஏற்புடையது அல்ல, மிகவும் கண்டிக்கத்தக்கது. இனிவரும் காலங்களில் இதுபோன்று, தனிநபர்களின் பெயரில் அவர்களுக்கு தெரியாமல் அவர்களின் கவனத்திற்கு அப்பாற்பட்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1) ன் கீழ் மனு யாரேனும் செய்து, அதன் மூலம் அரசு இயந்திரத்தையும், அரசு ஊழியர்களின் பணி நேரத்தையும், மனித ஆற்றல்களையும் வீணடிப்பது போன்று இந்த சட்டத்தை தவறாக பயன்படுத்தினால் அவர்கள் மீது அந்தந்த மாவட்ட காவல் கண்காணிப்பாளர் குற்றவியல் நடவடிக்கை எடுக்க ஆணையம் பரிந்துரை செய்யும் என்று இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

9. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய தகவல்களை ஏற்கனவே ப.மு.எண்.1846922/2025/எச்.4, 26.08.2025 நாளிட்ட கடிதம் வாயிலாக வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகலினை இவ்வாணையத்தில் சமர்ப்பித்தார்.

10. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரரின் மனுவையும் பொதுத்தகவல் அலுவலரின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்து, பொதுத்தகவல் அலுவலரால் அளிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையிலும், மனுதாரர் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையிலும் இம்மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்யப்பட்டு இவ்வாணையத்தால் ஆணையிடப்படுகிறது.

**ஒம்/-(வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

<u>**வழக்கு எண்.SA 17778/D/2025**</u>

**பெறுநர்**
<u>**பொது அதிகார அமைப்பு**</u>

பொதுத் தகவல் அலுவலர்/
இணை ஆணையர் (சட்டம்),
இணை ஆணையர் அலுவலகம்,
(தலைமையிடம்),
இந்து சமய அறநிலையத்துறை,
நுங்கம்பாக்கம், சென்னை -34.

<u>**மனுதாரர்**</u>
செல்வி ச.தைபாவை,
த/பெ. திரு சந்தனப்பொழிலன்,
க.எண்.84, தொடக்கப்பள்ளி அருகில்,
சந்திரபுரம் கிராமம்,
06 வது வார்டு,
ஜோலார்பேட்டை ஊராட்சி ஒன்றியம்,
நாட்றம்பள்ளி தாலுக்கா,
திருப்பத்தூர் மாவட்டம் - 635 651.

***Copy to: File***
***VP / PA***